அழைக்கிறார் யேசு ஆண்டவர்

அழைக்கிறார் யேசு ஆண்டவர்
ஆவலாய் நாம் செல்லுவோம்
அவர் பலியினில் கலந்திட
அவர் ஒளியினில் நடந்திட - 2
சாட்சிகளாய் என்றும் வாழ்ந்திட- இந்நாளிலே

1)
தேடியே தேவன் வருகிறார்
தன்னையே நாளும் தருகிறார்
தோள்களில் நம்மைத் தாங்குவார்
துயரினில் அவர் தேற்றுவார்
சுமைகளை சுகங்களாக மாற்றுவார்
வழமுடன் வாழும் வழியைக் காட்டுவார் - 2
வாருங்கள் ஒருடலாய் இணைந்திடுவோம்
வானகத் தந்தையை நாம் வணங்கிடுவோம்

2)
அன்பினால் உலகை ஆளுவார்
ஆவியால் நம்மை நிரப்புவார்
ஆமைதியை என்றும் அருளுவார்
ஆனந்தம் நெஞ்சில் பொழிகுவார்
விடியலின் கீதமாக முழங்குவார்
விடுதலை வாழ்வை நமக்கு வழங்குவார்- 2
வாருங்கள் ஒருடலாய் இணைந்திடுவோம்
வானகத் தந்தையை நாம் வணங்கிடுவோம்